வினாக்கள்—விடைகள்

(அ) விசைத் தறிகள் மூலம் 40 அங்குல அகலத்திற்கு மேல் லுங்கிகள் நெசவு செய்யக்கூடாது என்கின்ற விதிகளை மீறி 50 மற்றும் 54 அங்குல அகலத்திற்கு மேலும் லுங்கிகள் நெசவு செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அனுமதி பெற்ற விசைத் தறிகளும் இருக்கின்றன, அனுமதி பெறாத விசைத் தறிகளும் இருக்கின்றன. அவர்கள் இன்றைக்குக் கரை போட்ட வேட்டிகளையும், லுங்கிகளையும் நெய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் கைத்தறியில் தயாரிக்கபடும் லுங்கிகள் ஏராளமாகத் தேங்கியிருக்கின்றன. காரணம், கைத்தறியில் நெய்யபடும் லுங்கியின் விலை, விசைத் தறி மூலம் நெய்யப்படும் லுங்கியைவிட பத்து ரூபாய் அதிகமாக இருப்பதால் அவர்களோடு இவர்களால் போட்டி போட முடியவில்லை. அப்படித் தயாரிக்கின்ற விசைத் தறியாளர்களின் மீது கடுமையான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு. பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் அரசு முயற்சி செய்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்கு மைய அரசின் உதவியை கோரியிருக்கிறோம்.

வேடசந்தூர் மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம்.

774—(*வினா எண் 1425) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டத்தின் பகுதிகளுக்கு உரிய மின் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம் திண்டுக்கல்லில் அமைத்துள்ளதை மாற்றி வேடசந்தூரில் அமைக்க கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச். இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல்லில் இயங்கும் கோட்டப் பொறியாளர் அலுவலகமும், வேடசந்தூர் வருவாய்ப் பிரிவும் வேடசந்தூருக்கு மாற்றுவது குறித்து பெறப்பட்ட மனு பரிசீலிக்கப்பட்டு, நிர்வாகக் காரணங்களால் இக்கோரிக்கை செயல்படுத்த முடியாததால் கைவிடப்பட்டது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிர்வாகக் காரணங்களால் கைவிடப்பட்டது என்பதற்கு எந்தவிதமான அடிப்படை நியாயமும் கிடையாது. காரணம், வேடசந்தூர் தொகுதியில் இருக்கின்ற மூன்றில் இரண்டு பகுதி கிராமங்களையும், திண்டுக்கல் நகரத்திலே இருக்கின்ற மூன்றில் ஒரு பகுதியையும் இணைத்து திண்டுக்கல் டி. இ. நார்த் என்றும், நகரத்திலே மூன்றில் இரண்டு பகுதிகளையும் வேடசந்தூர் தொகுதியிலேயே சில ஊர்களையும் சேர்த்து கொண்டு டி.இ. சவுத் என்றும் வைத்துக் கொண்டார்கள். உண்மையிலேயே சொல்லப்போனால் அந்த அலுவலகம், அதிகாரிகள் திண்டுக்கல் நகரத்திலே இருக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக அதை வைத்துக் கொண்டார்கள். அதையெல்லாம் விட மேலாக, மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு ஆண்டுக்காலத்திற்கு முன்பாக, இதே அவையிலேயே நிச்சயமாக, அவசியமாக, உறுதியாக இந்த இரண்டு அலுவலகங்களும் வேடசந்தூருக்கு மாற்றபடும் என்று தெளிவாக வாக்குறுதியைக் கொடுக்கிறேன் என்று தெளிவான வாக்குறுதியைக் கொடுத்தார்கள். இப்படி அமைச்சர் வாக்குறுதி கொடுத்து, துறை நிறைவேற்றவில்லை என்றால் அதற்கான நடவடிக்கை இருக்கிறதா? அதன் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் இருக்கிறாரா என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அஷ்யூரன்ஸ் கமிட்டியில் புல் அப் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற முறையில் அந்த உறுதி தரப்பட்டது. அது, தள்ளினும் தள்ளாமை என்ற முறையில் தள்ளப் பட்டதே தவிர, வேறல்ல, மீண்டும் அதைப் பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு செய்தியையும் அமைச்சரவர்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். 1982 ஆம் ஆண்டு உண்மையிலேயே இந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை

வேடசந்தூருக்கு மாற்ற வேண்டுமென்று வாரியமே உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவிலே வருவாய்த்துறையும், கோட்டப் பொறியாளர் அலுவலகமும் ஒரேயிடத்தில் இயங்க வேண்டும், எனவே வேடசந்தூரிலே இருக்கின்ற வருவாய்த் துறையுடன் இணையும் வகையில் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை மாற்ற வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது துறை என்று உத்தரவே போட்டார்கள். ஆனால் அந்த உத்தரவைச் சரி செய்வதற்கு இந்த அலுவலகத்தை அங்கே மாற்றுவதற்குப் பதிலாக, வேடசந்தூரில் இருந்த வருவாய்த்துறை அலுவலகத்தையும் தூக்கி திண்டுக்கல்லுக்கு மாற்றி விட்டார்கள். இப்படிப் பட்ட தவறை மின்சார வாரியம் செய்திருக்கிறது. அருள் கூர்ந்து அமைச்சரவர்கள் இந்தத் தவறைத் திருத்த அரசாங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. அதிகாரப் பற்றற்றவர்களைவிட, அதிகாரிகள் எவ்வளவு திறமைசாலிகள் என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆகவே, வசதியைத் தேடி, திண்டுக்கல்லுக்கு வந்து விட்டதாகப் புலன் ஆகிறது. இதைப்பற்றி நிச்சயமாக மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.

**பாண்டியாறு, புன்னம்புழா, நெல்லித்துறை மின் திட்டங்கள்.**

775—(வினா எண் 8899) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு, புன்னம்புழா மற்றும் நெல்லித்துறை மின் திட்டங்கள் அமைய மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: (அ). ஆம்.

(ஆ) பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக கேரள, தமிழக மாநிலங்களுக்கிடையே 1965 ஆம் ஆண்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இத்திட்டத்தின் மீது முடிவெடுக்குமுன் பாண்டியாறு, புன்னம்புழா நதிகளின் நீரைப் பாசனத்திற்கு திருப்பி விட முறையீடுகள் வரப் பேற்றன. இதுகுறித்து கேரள அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, இரண்டு மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஓர் உடன்பாடு ஏற்படுத்துவது தொடர்பாகமேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.